2017 ஜூலை 11][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

7. விவசாயிகளுக்குத் தரமான இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் உரிய நேரத்தில் சென்றடையும் வகையில், வேளாண் விரிவாக்கச் சேவையினை மேம்படுத்திட, அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, நடப்பாண்டில் 430 வேளாண் உதவி அலுவலர் பணியிடங்கள் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) ஈரோடு, மதுரை, நாமக்கல் மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் அக்கட்டடங்களுக்கு 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடம்' எனப் பெயரிடுதல், காவல் துறையில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை உருவாக்குதல், மீட்புப் பணிகளுக்குத் தகவல் தொடர்பு உள்ளிட்ட நவீன கருவிகள் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும், அம்மா அவர்களின் அரசு சார்பாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.*

1. அரசின் சேவைகளை எளிதாகவும், விரைவாகவும், பொது மக்கள் பெறுவதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய அரசின் கொள்கையாகவே ஏற்று செயல்படுத்தி வந்தார்கள். ஈரோடு மாவட்டத்தில், மாவட்ட பஞ்சாயத்து அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையம், பால் கூட்டுறவுச் சங்க அலுவலகம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகம், கூட்டுறவுச் சங்கங்களின் துணை பதிவாளர் அலுவலகம், வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகம், குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், சமூக நலத் துறை அலுவலகம் உள்ளிட்ட இதர அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2017 ஜூலை 11

52 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். இந்தக் கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடம்" என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மதுரை மாவட்டத்தில், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தணிக்கைத் துறை, மாவட்டக் கருவூலம், ஆதி திராவிடர் நல அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட வழங்கல் அலுவலகம், மண்டல கலால் அலுவலகம் உள்ளிட்ட இதர அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட 26 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடம்" என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. நாமக்கல் மாவட்டத்தில், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகக் கிளை அலுவலகம், கல்வித் துறை அலுவலகங்கள், பால் வளத் துறை, குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகம் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகம் ஆகிய அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2017 ஜூலை 11][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நண்பகல் 12–00

4. பேரிடர்களின்போது, மாநில அரசு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து முறையான மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்கின்றது. பேரிடர் கால பாதிப்பு மிக அதிக அளவில் உள்ளபோது, மாநில துறைகள் மட்டுமல்லாமல் தேசிய பேரிடர் மீட்புப் படையிலும், மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பேரிடர்களின்போது ஏற்படுகின்ற இன்னல்களைக் குறைக்கும் விதமாகவும், பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மிக துரிதமாக மீட்பு உதவிகளை உடனுக்குடன் காலவிரயமின்றி அனுப்பிடவும், பாதிப்பிற்குள்ளான பகுதிகளையும், மக்களையும் எளிதில் சென்றடைவதற்கும், உள்ளூர் நிலப் பகுதி பற்றி நன்கு அறிந்திருக்கும் ஒரு தனி அமைப்பு தேவைப்படுகிறது. எனவே, தேசிய பேரிடர் மீட்புப் படை வழியில் ஏற்கெனவே உள்ள மாநில பேரிடர் மீட்புப் படையினை பலப்படுத்திடவும் மற்றும் பெரும் பேரிடர்களின்போது அனைத்து விதமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், காவல் துறையில் தனியாக ஒரு பட்டாலியன் "தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை" என்ற ஒரு புதிய பெயரில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் திறன் மேம்பாட்டிற்காகவும், தகவல் தொடர்பு மற்றும் மீட்பு உபகரணங்கள் வழங்குவதற்கும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 15 கோடி ரூபாய் வழங்கப்படும்.

5. பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக வரலாறு காணாத பேரிடர் நிகழ்வுகளைத் தமிழகம் சமீபக்காலமாகத் தொடர்ந்து சந்தித்து வருகிறது. மீட்புப் பணிகளில் ஈடுபடும் பல்வேறு துறைகளின் திறன் மேம்பாட்டிற்காகவும், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு பணிகளை மேம்படுத்துவதற்காகவும் நவீனக் கருவிகளை தமிழ்நாடு அரசு மாநில பேரிடர் மேலாண்மை நிதியின்மூலம் வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இந்த வருடம், சென்னை மாநகராட்சி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கடலோரக் காவல் படை, வனத் துறை, பொதுப் பணித் துறை, ஊர்க் காவல் படை, நெடுஞ்சாலைத் துறை போன்ற துறைகளுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் தகவல் தொடர்பு, தேடுதல் மற்றும் மீட்பு சாதனங்கள் உள்ளிட்ட நவீனக் கருவிகள் வாங்கிட 52 கோடியே 40 இலட்ச ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)